தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 13-6-2016

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## கேரட் மற்றும் பீட்ரூட்டிற்கு நல்ல விலை கிடைக்கும்

**கேரட்**

வேளாண் அமைச்சகத்தின் மதிப்பீட்டின் படி, 2015-16 ல் இந்தியாவில் கேரட், 0.65 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 9.50 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஹரியானா, உத்திரபிரதேசம், பீகார், கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் அசாம் கேரட் விளைவிக்கும் முக்கிய மாநிலங்களாகும். 2015-16 ஆம் ஆண்டு தோட்டக்கலைத் துறையின் படி தமிழ்நாட்டில் கேரட் 3453 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கேரட் நீலகிரி, திண்டுக்கல் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது. 2015-16 ஆம் ஆண்டு, நீலகிரியில் கேரட் 2854 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது.

கர்நாடகா மாநிலம் மாலூரிலிருந்து மேட்டுப்பாளையம் சந்தைக்கு வரும் கேரட் வரத்து, ஏப்ரல் மாதத்தில் முடிவடைந்தது. கேரட்டுக்கு அதிக தேவை இருப்பதால் கடந்தாண்டை விட, விலை சற்று அதிகமாக உள்ளது. இப்பருவத்தில் கேரட் நிலையான பரப்பளவில் விதைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இச்சூழலில் விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 11 ஆண்டுகளாக மேட்டுப்பாளையம் மொத்த சந்தையில் நிலவிய கேரட்டின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், ஊரகமேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் ஜீன் - ஜீலை, 2016 மாதங்களில் மலை பகுதியில் விளையும் தரமான கேரட்டின் மொத்த சந்தை விலை கிலோவிற்கு ரூ.35 மற்றும் சமவெளியில் பயிரிடப்படும் கேரட்டின் விலை கிலோவிற்கு ரூ.30 இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மேற்கண்ட விலை முன்னறிவிப்பின் படி, விற்பனை முடிவுகளை எடுக்க பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**பீட்ரூட்**

தெற்கு ஐரோப்பாவை பிறப்பிடமாகக் கொண்ட பீட்ரூட் காய்கறிகளில் மிகவும் பிரபலமானது. இந்தியாவில் பீட்ரூட், ஹரியானா, உத்திரபிரதேசம், இமாச்சலபிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது.2015-16 ஆம் ஆண்டு தோட்டக்கலைத் துறையின் படி, தமிழ்நாட்டில் பீட்ரூட் 1421 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. 2015-16 ஆம் ஆண்டு, நீலகிரியில் பீட்ரூட் 431எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து பீட்ரூட் மாலத்தீவுகள், ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போது பீட்ரூட் தமிழ்நாட்டின் தாளவாடி பகுதியிலிருந்தும், கர்நாடகா குண்டல்பேட் மாவட்டத்திலிருந்தும், மேட்டுப்பாளையம் மொத்த சந்தைக்கு வரத்து துவங்கியுள்ளது. தமிழ்நாட்டில் பீட்ரூட் நீலகிரியிலும், திருப்பூர் மற்றும் தேனியின் சில பகுதியிலும் பயிரிடப்படுகிறது. மலைப் பகுதியில் பயிரிடப்படும் பீட்ரூட் நிறம், வடிவம், மற்றும் மெல்லிய தோல் ஆகியவற்றைக் கொண்டுள்ளதால் நுகர்வோர்களால் அதிக அளவு விரும்பப்படுகிறது.

இச்சூழலில் விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 11 ஆண்டுகளாக மேட்டுப்பாளையம் மொத்த சந்தையில் நிலவிய பீட்ரூட்டின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், ஊரகமேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கிவரும் விலை முன்னறிவிப்பு திட்டம் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் ஜீன்-ஜீலை, 2016 மாதங்களில் மலைபகுதியில் விளையும் தரமான பீட்ரூட்டின் மொத்த சந்தை விலை கிலோவிற்கு ரூ.30 மற்றும் சமவெளியில் பயிரிடப்படும் பீட்ரூட்டின் விலை கிலோவிற்கு ரூ.26 இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மேற்கண்ட விலை முன்னறிவிப்பின்படி, விற்பனை முடிவுகளை எடுக்க பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2431405

<u>தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்,
விஜயநகரம்,
உதகமண்டலம் - 643 001.
தொலைபேசி எண்: 0423-2442170

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்